அதிகாரம் 18

# தேவன் ஆபிரகாமை சந்திக்க வருதல்

இதற்கு முந்தின அதிகாரத்திலே, யேகோவா ஆபிரகாமிற்கு காட்சி அளித்தார். தேவன் வாக்குத்தத்தத்தின் பூமியான கானானைக் காட்டிக் கொடுத்ததும் (17:8), விருத்தசேதன உடன்படிக்கையின் விவரங்களும் (17:9-14), மற்றும் ஆபிரகாம் சாராளுடைய பெயர்களை மாற்றியதும் (17:5, 15), இந்த சந்திப்பில் நடந்த காரியங்களாகும். எதிர்கால ஜாதிகளுக்குத் தாயான சாராளுக்கு ஈசாக்கு என்ற ஒரு குமாரன் பிறப்பான் (17:16, 19) என்பதும், மற்றும் ஒரு திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக இஸ்மவேல் இருப்பான என்பதும், அவன் பன்னிரெண்டு பிரபுக்களுக்குத் தகப்பனாக இருப்பான் (17:20) என்பவைகளைத் தேவன் சொன்னார். அதற்கு பிறகு, அக்காட்சியிலிருந்து திடீரென அவர் மறைந்து விட்டார் (17:22). ஆபிரகாமை மீண்டும் கர்த்தர் சந்தித்ததைப் பற்றி, அதிகாரம் 18ல் பார்க்கலாம்.

## மூன்று பரலோக விருந்தினரை ஆபிரகாம் உபசரித்தது (18:1-8)

**1பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடார வாசலிலே உட்கார்ந்திருந்து, 2தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடார வாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித்தரைமட்டும் குனிந்து, 3ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்து போக வேண்டாம். 4கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள். 5நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய் என்றார்கள். 6அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில்**

**சாராளிடத்திற்குப் போய்: நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்றான். [7]ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுத்தான்; அவன் அதைச் சீக்கிரத்தில் சமைத்தான். [8]ஆபிரகாம் வெண்ணெயையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்து, அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள்.**

**வசனம் 1. கர்த்தரே** (*Yahweh*) அல்லது (יהוה, *YHWH*) “யஃவே” மறுபடியும் வந்து சேர்ந்தார். இந்த முறை மனிதர்களைப் போல காட்சியளித்த மூன்று பரலோக பார்வையாளர்கள் அடங்கிய ஒரு கழகமாக வந்தார். இருந்த போதிலும் இச்சரித்திரத்தின் பிந்தய பகுதிக்கு வரும்வரை, ஆபிரகாம் இந்த குழுவில் பேசுகிறவரின் அடையாளத்தைத் கண்டுபிடிக்க முடியவில்லை (ஆதி. 18:10, 13, 14, 17, 20, 25-27, 30, 32, 33).

வயதான கோத்திரத்தலைவன் (அவனது) **கூடாரத்தின் வாசலில் உட்கார்ந்து** கொண்டிருந்தான். நாடோடிகளின் கூடாரங்களில் மடிப்புகள் இருப்பதால், பகல் நேரங்களில் அதை உயர்த்தும் பொழுது, தென்றல் காற்றானது அதைக் கடந்து அவர்களைச் சேர வழிவகுக்கும். கூடார வாசலில் அமர்ந்திருப்பது. ஆபிரகாமிற்கு அதன் நிழலில் களிகூரவும் மற்றும் தென்றல் காற்றை அனுபவிக்கவும் வழிவகுத்துள்ளது.[1] இதனுடன், அநேகமாக அவனுடைய கூடாரமானது, **மம்ரேயின் கருவாலிகளில்** ஒன்றின் நிழல் விழும்படியாக இருந்திருக்க வேண்டும் (ஆதி. 13:18; 14:13). அங்கே அதிகமான உஷ்ணமான மத்தியான வேளையிலே கண்ணைக் கூசும் சூரிய ஒளியிலிருந்து நிவாரணத்தைத் தேடி, அவனுடைய கண்களுக்கு ஓய்வு கொடுத்திருக்க வேண்டும்.

**வசனம் 2.** திடீரென்று, **தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது**, இதோ, **மூன்று புருஷர்; அவனுக்கு எதிரே நின்றார்கள் அவர்களைக் கண்டவுடனே** அவன் கூடாரவாசலிலிருந்து **அவர்களுக்கு எதிர் கொண்டு ஓடித் தரை மட்டும் குனிந்து வணக்கம் செலுத்தினான்.** “குனிந்து” என்பதற்கு இங்கே உபயோகப்படுத்தியிருந்த எபிரெய பதம் (חָוָה, *chawah*) சவா என்பது, சாதாரணமாக பழைய ஏற்பாட்டு காலங்களில் கர்த்தரை (அல்லது விக்கிரகங்களை) தொழுது கொள்வதை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது (ஆதி. 24:26; யாத். 20:5). எப்படியிருந்தாலும், இந்த சம்பவத்தில், ஆபிரகாமைப் போல “நெடுஞ்சான் கிடையாக விழுந்து வணங்கினான்” என்ற அர்த்தம் கொள்ளும்படியாக “இந்த பொதுவான ஒரு செயலானது, சில நிகழ்ச்சிகளில் சுய அவல நிலையில் உறவினர்கள், வேற்று மனிதர்கள், மேலதிகாரிகள், மற்றும் முக்கியமாக ராஜ பதவியில் இருப்பவர்களுக்கு முன்பாக கடைப்பிடிப்பதாகும்.”[2] ஒரு விருந்தளிப்பவராக ஆபிரகாம்

இந்தப் பார்வையாளர்கள் பரலோகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மை நிலையை தெரிந்து கொள்வதற்கு முன், பணிவுடனும், மரியாதையுடனும் அந்நியர் களுக்கு ஒரு இரக்கம் உள்ள வரவேற்பு அளித்தான்.

**வசனம் 3.** ஆபிரகாமுடைய இந்த நடவடிக்கையானது, கிழக்குக்கு அருகே உள்ள பழங்கால மக்களின் உபசரிப்பு தன்மை, மற்றும் குறிப்பாக சமுதாயத்தின் விளிம்புகளில் வசித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு விருந்தினரை மகிழ்விக்கவோ அல்லது விருந்துக்குச் செல்வதற்கோ சிறிதளவே சந்தர்ப்பம் கிடைப்பதைப் போன்றதன் ஒரு விளக்கமாக இருந்தது. மேலும், அந்த கலாச்சாரத்தில் விருந்தளிப்பவர் விருந்தாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்பவராகவும், மற்றும் அவர்கள், அவரிடம் இருக்கும் வரை பாதுகாப்பு அளிக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். ஆகவே, கோத்திரத் தலைவன் தலைவரிடம் **ஆண்டவரே** என்று இந்த சூழலில் சொல்லுவது ஒரு தாழ்மையான "ஐயா"[3] என்று சொல்வதற்கு இணையான வரவேற்பு முறையில் உரை யாற்றியதாகும். அவன் ஆண்டவரே, **உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால் நீர் உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம்** என்று ஒப்புக்கொள்ளுமாறு பேசினான்.

**வசனங்கள் 4, 5.** பிறகு அவன், உஷ்ணத்தினாலும் தளர்ந்து வரும் வழிப்போக்கர்களுக்கு, எப்பொழுதும் பாராட்டும் வண்ணமாக **குடிப்பதற்கு தண்ணீரும்** மற்றும் கால்களை (அவர்களுடைய) **கழுவுவதற்கு** நீரும் கொடுக்கும் காரியத்தைத் தொடர்ந்தான் (ஆதி. 19:2; 24:32; 43:24; நியா. 19:21; லூக். 7:44 பார்க்க). கொஞ்சம் அப்பம் ("ஒரு துண்டு அப்பம்"; NKJV) கொண்டு வருகிறேன், அது வரை **மரத்தடியில் சாய்ந்து** கொண்டிருங்கள் என்று அவன் அவர்களை வரவேற்றான். (காண்க 18:1) இதுவே, ஆபிரகாமின் மனதில் அவனது விருந்தினர்களுக்காக அடியில் கூறப்பட்டுள்ளபடியான விருந்தின் வகைக்கான ஒரு வழியாகும். அது விருந்தினர் அவன் மீது சுமத்தியுள்ள பாரம் அல்ல என்பதை அவர்களுக்கு உறுதியளிக்குமாறு, அவர்களை எளிமையாக்கும் நோக்கத்துடன் அவன் செய்த செயலாகும். இல்லாவிடில், அவர்கள் அவனது வரவேற்பினை நிராகரித்திருக்க வேண்டும். பார்வையாளர்கள் அதைக் கேள்விப்பட்ட பொழுது, அவர்கள் **நீ சொன்னபடி செய்** என்று பதிலளித்தார்கள்.

**வசனம் 6.** ஆபிரகாம் வயது சென்றவனாய் இருந்த போதிலும், மேலும் பகலின் உஷ்ணவேளையையும் பொருட்படுத்தாது அவனுடைய விருந்தினர்களை உபசரிக்கவும், மற்றும் அவர்களுக்கு என்னென்ன தேவை உண்டோ அதை பூர்த்தி செய்வதிலும் அவன் விருப்பமுள்ளவனாயிருந்தான். ஆபிரகாம் ***தீவிரமாய் கூடாரத்தில் சாராளிடத்திற்குப் போய்:*** *நீ சீக்கிரமாய்* ***மூன்று படி*** ["சீஃஸ்," என்.ஐ.வி] **மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு என்றான்.** ஒரு படி

என்பது ஏறத்தாள இரண்டு காலன்கள் (அல்லது எட்டு லிட்டர்கள்)[4] என்றாலும் மூன்று படி மாவினால் ஒரு பெரிய அளவிலான அப்பங்களை தயார் பண்ணலாம் என்றும், அதுவே ஆபிரகாமுக்கும், சாராளுக்கும், மற்றும் மூன்று பார்வை யாளர்களுக்கும் சாப்பிடுவதற்கு அளவுக்கு அதிகமாய் இருந்திருக்க வேண்டும். இந்த சரித்திரத்தில் ஒருவரும் தெரியப்படுத்தாவிடினும், ஆபிரகாமிற்கு ஒரு பரிவாரக் கூட்டமான ஜனங்கள் அவனுக்கு இருந்தார்கள் என்பது நினைவிற் கொள்ள வேண்டியதாய் உள்ளது (14:14). இந்த மனிதர்களுடன் ஒருவரும் கூட சாப்பிடவில்லை என்றாலும், ஆகாரமானது வீணாய் இருக்க முடியாது. “மெல்லிய மாவு” என்பது ஒரு உயர்ந்த தரமான மாவைக் குறிப்பதாயும், கோதுமையிலிருந்து மெல்லியதாக அரைக்கப்பட்டதாயும் உள்ளது. எங்கும், மலிவான வாற்கோதுமையை விட வேறுபடும் பண்பு டையதாய் இது நிலைத்து நிற்கிறது (2 இராஜா. 7:1, 16). கட்டளையில், “மெல்லிய மாவு” அடிக்கடி கர்த்தருடைய பலிகளுக்காக தேவைப்படும் ஒன்றாய் உள்ளது (யாத். 29:2, 40; லேவி. 2:1-7; 5:11; 6:15, 20).

**வசனங்கள் 7, 8.** ஒரு ஆட்டுக்குட்டியோ அல்லது ஒரு ஆடோ அவர்களின் தேவைக்கு அதிகமானதாக இருக்கக்கூடும், ஆனால் இந்த வழிபோக்கர்களுக்கு மாட்டு **மந்தையிலிருந்து ஒரு கொழுத்த கன்றினை** அடித்த பெருந்தன்மையை நோக்குகையில் அவர்கள் அரசர்களைப் போன்று மதிப்பளிப்பதனை எடுத்துக் காட்டுகிறது (2 சாமு. 12:4; லூக். 15:27-30 பார்க்க). மூதாதையர் ஆபிரகாம் இப்படியொரு விருந்தளிக்கையில், “நீ ஆசீர்வாதமாக இருப்பாய்” என ஆண்டவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் கூறினதை மீண்டும் நினைவுகூருகிறார் (12:2), தனது விருந்தினருக்கு தன்னிடமுள்ள சிறப்பானதை தருவதற்காக இந்த கூடுதல் முயற்சியை அவர் எடுத்துக்கொண்டார். அவரது வேலைக்காரர்கள் இறைச்சியை ஆயத்தம் பண்ணின பின்னர், ஆபிரகாம் **தயிர்**, **பால்** மற்றும் **கன்று குட்டியின்** இறைச்சியை அவர்களுக்கு பரிமாறினார் (காண்க உபா. 32:14; நியா. 5:25; 6:18, 19). மேலும் அவர்கள் உண்கையில் மரத்தடியில் அவர்களோடு நின்றார்.

## சாராள்: விசுவாசமில்லாதிருந்த விருந்தளிப்பவள் (18:9-15)

**9அவர்கள் அவனை நோக்கி: உன் மனைவி சாராள் எங்கே என்றார்கள்? அதோ கூடாரத்தில் இருக்கிறாள் என்றான். 10அப்பொழுது அவர்: ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். 11ஆபிரகாமும்**

**சாராளும் வயது சென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று. [12]ஆகையால், சாராள் தன் உள்ளத்திலே நகைத்து: நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள். [13]அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைபெறுவது மெய்யோ என்று சொல்வானேன்? [14]கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். [15]சாராள் பயந்து, நான் நகைக்கவில்லை என்று மறுத்தாள். அதற்கு அவர்: இல்லை, நீ நகைத்தாய் என்றார்.**

**வசனம் 9.** ஆபிரகாமோ அல்லது சாராளோ விருந்தினரோடு இணைந்து உணவு அருந்தவில்லை என்பது இங்கு வெளிப்படையாக இருக்கிறது. மூதாதையர் ஆபிரகாம் அவர்கள் உணவருந்துகையில் அவர்களோடு நின்றார், அவர்களை உபசரிப்பவராகவும், பரிமாறுகிற பணியாளரைப் போன்றும் செயல்பட்டார். மூதாதையர்களின் வழக்கப்படி சாராள் பக்கத்தில் இருந்தாலும் காணப்படாமல் இருந்தார்; பொதுவாக ஆண் விருந்தினரோடு பெண்கள் இணைந்து காணப்படுவது இல்லை[5] **உன் மனைவியாகிய சாராள் எங்கே?** என வந்திருந்த புருஷர்கள் வினவினர், ஆபிரகாம் தன் மனைவியின் பெயர் இவர்களுக்கு எப்படி தெரிய வந்தது? என அவர்களின் வினாவை குறித்து அதிர்ச்சியடைந்திருக்கக்கூடும். ஆபிரகாம் அவரது மனைவியை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார் என்பதனை குறித்து வசனம் எந்த குறிப்பையும் தெரிவிக்கவில்லை. இந்த நிகழ்வின் முடிவுகள், இவர்கள் சாதாரண மனிதர்களை விட மேலானவர்களாக இருக்கக் கூடுமெனும் வியப்பில் அவரை ஆழ்த்தியிருக்கக்கூடும். அவர் எப்படி யூகித்திருந்தாலும் **அவள் அதோ கூடாரத்தில் இருக்கிறாளென** பதில் கூறினார்.

**வசனம் 10.** இதன் முக்கிய பேச்சாளர் 18:13ல் "கர்த்தர்" (யாவே) என அடையாளப்படுத்தப்படுகிறார்: அதன் பின்னர் அவர் **அப்பொழுது அவர்: ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்.** இதற்கு முன்னர் ஒரு மகனை தருவேன் என ஆண்டவர் கூறின வாக்குத்தத்தமானது உறுதியில்லாமல், வாக்குப்பண்ணப்பட்ட சுதந்திரவாளி எப்போது வருவார் என்பதனை குறித்தக் காலக் கெடு இல்லாமல் இருந்தது. இந்த வெளிப்பாட்டிற்கு முரணாக, இந்த நிகழ்வில் கர்த்தருடைய அறிக்கையானது உற்பவகாலத்திட்டத்தில் (כָּעֵת חַיָּה, *ka'eth chayyah*, கயத் சய்யா). உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என குறிப்பிட்டு கூறுவதாக அமைந்தது.

2 இராஜாக்கள் 4:16, 17லும் காணப்படும் இச்சொற்றொடர் மறைமுகமாக வசந்த காலமாகிய "மறுபரிசீலனையின் சமயத்தினை"[6] குறிப்பிடுகிறது. இந்த தீர்க்கதரிசனத்தில் சாராள் கருவுறுவதற்கு ஒரு ஆண்டிற்குள் ஆண்டவர் இந்த மூதாதையருக்கு என்ன செய்தார் என்பதனை குறித்து எந்த விளக்கமும் கூறவில்லை, ஆனால் கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார் என 21:1 வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒரு மகனைப் பெறுவாரெனும் தீர்க்கதரிசன சொற்களை **கூடாரத்தின் வாசலருகே நின்று கொண்டு சாராள் ஒட்டு கேட்டுக் கொண்டிருந்தார்.** அந்த தெய்வீக பேச்சாளர் தனது பின்புறத்தைக் காட்டி அமர்ந்திருந்திருக்க வேண்டும் எனவே ஆண்கள் தனியறையில் பேசிக் கொண்டிருந்ததனை சாராள் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார், அதனை அவர்கள் காணக் கூடுமென அவர் நினைக்கவில்லை.

**வசனம் 11.** இங்கே இந்த நிகழ்வை எடுத்துரைப்பவர் **ஆபிரகாம்** மற்றும் **சாராள்** ஆகியோர் **முதிர்வயதுடையவர்களாக** இருந்து குழந்தை பெறுவதற்கு தகுதியிற்று இருக்கிறார்கள் என்பதை வாசகருக்கு நினைவுபடுத்த ஒரு கூற்றை இடைச்சொருகிறார் (காண்க 17:17). **சாராள் மாத விடாய் நின்றுபோய்** குழந்தை பெறுவதற்கு தகுதியற்று இருக்கிறார் எனும் ஒரு சொற்றொடரை இடையில் புகுத்தி அதன் வாசகருக்கு சாத்திய மற்ற சூழலை நினைவுபடுத்துகிறார்.

**வசனம் 12.** இதன் காரணமாக, அவிசுவாசத்தோடு **சாராள் தனக்குத் தானே நகைத்துக் கொண்டாள்.** எனினும் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறு வயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்ட அவரது கணவரை விட இவருடைய அவிசுவாசம் பெரியதாக காணப்படவில்லை (17:17). ஆகையால், சாராள் தன் உள்ளத்திலே நகைத்து: **நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ** என்றாள். சாராளுடைய மறுமொழி ஆபிரகாமின் மறுமொழியை விட அடக்கம் நிறைந்ததாக இருந்தது, ஆனால் அவர்கள் இருவரும் மிகவும் "வயது முதிர்ந்தவர்கள்" என்பதனை உணர்ந்திருந்தார். கசப்பான பல ஆண்டுகள் கழிந்தப் பின்னர் இப்படிப்பட்ட ஒரு "இன்பத்தை" அனுபவிக்க வேண்டு மெனும் எண்ணத்தை அவர் எப்படி அனுமதிக்கக் கூடும்?

**வசனம் 13.** விருந்தினர் ஆபிரகாமோடு பேசினதை சாராள் இரகசியமாக ஒட்டுக் கேட்டார், ஆனால் தனக்குள்ளேயே சாராள் நகைத்ததை அவர் கேட்ட போது சூழல் தலைகீழாக மாறிப் போனது. இதன் ஆக்கியோன் பேசினவரை **கர்த்தர்** (யாவே) என அடையாளப்படுத்தி, சாராளுடைய பெயர் அவருக்கு எப்படி தெரிய வந்ததென்பதையும், அவர் தனக்குத் தானே நகைத்துக் கொண்டி

ருந்ததை அவர் அறிந்திருப்பதையும் விளக்குகிறார்; அவர் தனது முதிர் வயதில் குழந்தையினை பெற்றுக் கொள்ளக்கூடும் என்பதனை நினைத்து அவிசுவாசத்தில் நகைத்திருந்தார். எனவே ஆண்டவர் **ஆபிரகாமைப்** பார்த்து **சாராள் நகைத்தது ஏன்?** என வினவுகிறார்.

**வசனம் 14.** பல ஆண்டுகளாக இந்த மூதாதையினர் சந்தித்த அடிப்படை பிரச்சனையை (15:1-18:15) அங்கீகரிக்கும் விதமாக எற்ககெனவே தொடுத்த வினாவை பின்பற்றி **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?** எனும் மற்றொரு வினாவை ஆண்டவர் எழுப்புகிறார். எப்படியாயினும் இது “இல்லை” “ஆண்டவரால் கூடாதது ஒன்றுமில்லை” (எரே. 32:17; மத். 19:26; லூக். 1:37). எனும் பதிலை வலியுறுத்தும் பேச்சு திறன் மிக்க வினாவாகும். ஆண்டவர் தம்மை “சர்வ வல்லவர்” என ஏற்கெனவே விளங்கப் பண்ணியிருந்தார் (17:1). முதிர் வயதிலும் அவர்களை அற்புத விதமாக புதுப்பித்து உயிர்ப்பித்து குழந்தையை தர வல்லவராக இருக்கிறார் என்பதனை விசுவாசிக்க ஆண்டவர் ஆபிரகாமையும் சாராளையும் அழைப்பு விடுத்தார். **உற்பவகாலத்திட்டத்தில்** (“உயிர்ப்பிக்கும் காலம்” வசந்த காலம்) **உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன்** இருப்பான் என அவர் ஏற்கெனவே கூறினதை மறுபடியும் கூறினார்.

**வசனம் 15.** மனித உருவத்தில் வந்திருப்பது ஆண்டவர் என்பதனை **சாராள்** உணர்ந்து கொண்டாள், ஏனெனில் அவள் தனக்குள் சொல்லி நகைத்துக் கொண்டதை யார் அறியக் கூடும்? மேலும் அவள் தனது தனிப்பட்ட அவிசுவாச சிந்தனை வெளிப்டையாக வந்துவிட்டபடியால் **அச்சமுற்றாள்**. எனவே **அவள் அதனை மறுத்து நான் நகைக்கவில்லை** என கூறினாள். இப்படி உண்மையற்ற கருத்தினை கூறினது உயிருக்கு பயந்ததன் விளைவாக அவரது கணவர் பார்வோனிடம் பொய்யுரைத்ததற்கு ஒப்பாக இருக்கிறது (12:10-20). அவருடைய அவிசுவாசம் ஆண்டவருக்கு தெரிந்து விட்டதென்பதனை அவர் அறிந்தவுடன், அவரிடமிருந்து தண்டனை வருமென பயந்தார்; அவர் நகைக்கவில்லையென கூறினதின் மூலம் குற்றத்தை மேலும் குவித்துக் கொண்டார்.

ஆண்டவருடைய பதில் அவர் எதிர்பாராவண்ணம் அமைந்தது. அவர் அஞ்சினதுப் போன்று அது தெய்வீக கோபமாக இருக்கவில்லை. 17:17ல் அவரது கணவரின் அவிசுவாசத்திற்கும் தெய்வீக கோபம் வெளிப்படவில்லை. அதற்கு மாறாக இனப்பெருக்கத்தை பொறுத்தவரை, சரீரம் செத்தவர்கள், தங்களுக்கு பிள்ளைபேறு நிகழும் என்பதனை விசுவாசிப்பது மிக மிக கடினம் என்பதை ஆண்டவர் நன்கு அறிந்திருந்தார். எனவே ஒரு கடினமான தண்டனையைத் தரும் பதிலைத் தந்து சாராளின் இதயத்தை ஆண்டவர் பதட்டம் அடையச் செய்யவில்லை. அவர் உறுதியான மற்றும் கிருபை நிறைந்த பதிலாகிய

**இல்லை நீ நகைத்தாய்** என கூறினார்.

ஆபிரகாம் மற்றும் சாராளின் விருந்தினர்கள், நல்ல செய்தியைக் கொண்டு வந்திருந்தார்கள். பல ஆண்டுகள் காத்திருப்பிற்கு பிறகு ஆண்டவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் கிட்டியது; இன்னும் ஓராண்டிற்குள்ளாக அவர்கள் ஒரு மகனைப் பெற்றெடுப்பர் எனும் நற்செய்தியினை அவர்களுக்கு கொண்டு வந்தனர். விருந்தினர்கள் விடை பெறுமுன் அவருடைய சகோதரன் மகனாகிய லோத் வாழ்ந்த சோதோம் கொமோரா பட்டணங்கள் பொல்லாங்கினால் நிறைந்திருந்தபடியால் தெய்வீக நடவடிக்கை எடுக்கப்படப் போகிறதெனும் துர்செய்தியை ஆபிரகாமிற்கு அறிவித்துச் சென்றனர்.

## கர்த்தருக்கும் இரு தூதர்களுக்கும் இடையே நடந்த உரையாடல் (18:16-22)

**16பின்பு அந்தப் புருஷர் எழுந்து அவ்விடம் விட்டு, சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமும் அவர்களோடே கூடப்போய் வழிவிட்டனுப்பினான். 17அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், 18நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? 19கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். 20பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடி தாயிருப்பதினாலும், 21நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார். 22அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.**

**வசனம் 16.** பரலோகத்திலிருந்து வந்த மூன்று தேவ தூதர்கள், தங்களது முதற்கண் பணியாகிய **ஆபிரகாமையும்** சாராளையும் சந்திப்பது நிறைவுபெற்றப் பின்னர் புறப்பட ஆயத்தமாயினர். ஆபிரகாம் ஒரு சிறந்த உபசரிப்பாளராக அவரது விருந்தினர்களோடு உடன் சென்று வழிவிட்டனுப்பினார். அவர்கள் எபிரோன் மலையில் கிழக்கே மூன்று மைல்கள் பயணித்தனர், அங்கிருந்து சவக்கடல் சுமார் 18 மைல் தொலைவில் காணக்கூடியதாக இருந்தது. **இந்த மனிதர்கள் சோதோமை (பார்த்தார்கள்) நோக்கிப் போனார்களென**; பதிவுகள் கூறுகின்றன.

பண்டைய சோதோம் பட்டணம் அமைந்திருந்த சரியான இடத்தை துல்லியமாக அறிய இயலவில்லை, எனினும் இப்பட்டணம் சவக்கடலிற்கு தெற்கு முனையில் அமைந் திருந்திருந்ததாக பலர் கூறுகின்றனர். சவக்கடலின் தென் கிழக்கிலும் மற்றும் தென் மேற்கிலும், மற்றும் வடக்கு மற்றும் தெற்கு முனைகளிலும் கூட குழிகள் தோண்டப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியப் பகுதிகள் சில கண் டெடுக்கப்பட்டாலும், இந்த பட்டணங்கள் லோத் குடியிருந்த விவிலயப் பகுதிகளெனும் ஒருமித்த கருத்திற்கு வர இயலவில்லை. சோதோம் கொமோராவில் அழிந்த பகுதிகள் கடல் நீருக்கடியில் இருப்பதாக நம்புகின்றனர், மற்றவர்கள் அதன் அழிந்த பகுதிகள் மண்ணிற்கடியில் புதையுண்டிருப்பதாக எண்ணி, அதன் அமைப்பினை வெளிக் கொண்டு வர தொல்லியல் அகழ்விற்காக காத்திருக்கின்றனர்.[7]

**வசனங்கள் 17, 18.** இந்த காட்சியில் **ஆண்டவர்** ஆபிரகாமைப் பற்றிப் பேசுகிறார், ஆனால் ஆபிரகாமோடு பேசவில்லை. ஒருவேளை ஆண்டவர் தமக்கு தாமே அமைதியாக பேசிக் கொண்டாரா அல்லது அவருடன் இணைந்திருந்த இரண்டு தூதர்களுடன் பேசினாரா என்பதனை பற்றி வசனம் எத்தகவலையும் கூறவில்லை; இது தகவல் பரிமாற்றமாக இருந்ததெனினும் அவருடைய சொற்களை ஆபிரகாம் ஒட்டுக் கேட்கக்கூடாத வண்ணம் இருந்தது.

**நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?** என்பதே இங்கு ஆண்டவருடைய வினாவாக இருந்தது. பிற்பாடுள்ள வேத வரலாறுகளில், இவ்வகையான வினா மீண்டும் தொடுக்கப்பட்டாலும் அது வினாவாக தொடுக்கப்படாமல் உறுதிப்படுத்தும் வடிவமாக காணப்படுகின்றது. “கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்” (ஆமோஸ் 3:7) என ஆமோஸ் மூலம் யாவே அறிவித்தார். ஆண்டவர் ஆபிரகாமோடும் (20:7ல் தீர்க்கதரிசியாக கூறப்பட்டிருக் கிறார்) அவரது தீர்க்க தரிசன வழிதோன்றல்களோடும் இவ்வுலகத்தில் அவர் செய்ய திட்டமிட்ட தகவல்களை பகிர்ந்து கொண்டிருக்கிறார் எனும் கருத்தினை இவ்வசனம் பரிந்துரைக்கிறது.

எதிர்காலத்தில் **ஒரு பெரிய பலத்த ஜாதியாக ஆபிரகாம்** மாறப்போகிறார் என்பதே ஆண்டவர் தமது திட்டத்தினை அவருக்கு வெளிப்படுத்துவற்கு முதற் காராணமாக அமைந்திருந்தது. இந்த சொற்றொடர் 12:2; 13:16; 15:5; 17:4-6; ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்திருக்கிறது. எனினும் “பலத்த” எனும் பதம் கூடுதலாக சேர்க்கப்பட்டிருப்பது 12:2ல் கூறின அசல் வாக்குத்தத்தத்தை கூடுதல் உறுதிப் படுத்துகிறது. **அவருக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்** எனும் காரணம் ஆண்டவர் தமது

திட்டத்தினை அவருக்கு வெளிப்படுத்துவதற்கு இரண்டாம் அடிப்படை காரணமாக அமைந்தது. ஆபிரகாம் சோதோமினுடைய அரசர் மற்றும் அவருடைய மக்கள், லோத் மற்றும் அவரது இல்லத்தினர், மூன்று எமோரிய சகோதரர்கள், மற்றும் சாலேமின் அரசராகிய மெல்கிசேதேக்கு ஆகிய சிலருக்கு ஆசீர்வாதமாக இருந்தாரென 14:13-24 ஆகிய வசனங்களில் நாம் காண்கிறோம். 18:23-33ல் பொல்லாப்பு நிறைந்த பட்டணமாகிய சோதோமில் குடியிருந்த லோத்தை போன்ற ஒரு சிலருக்கு அவர் ஆசீர்வாதமாக இருக்க வேண்டியிருந்தது. அவர்கள் சார்பாக ஆண்டவரிடம் பரிந்து பேசி இவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

**வசனம் 19.** மனிதர்கள் மேலும் ஜாதிகளின் மேலும் ஆபிரகாமினுடைய தாக்கம் உலகளாவியதாகவும் மாபெரியதாகவும் இருப்பதற்கான காரணத்தை ஆண்டவர் எடுத்துரைக்கிறார்: **நான் அவனை தெரிந்து கொண்டேன்.** இதன் சரியான எபிரெய உச்சரிப்பு "நான் அவனை அறிந்திருக்கிறேன்" (יָדַע, *yada'*, யாதா) என்பதாகும். யாவே இந்த மூதாதையரைக் குறித்து மிக நெருக்கமாக அறிந்திருந்தார். யதா எனும் பதத்தின் அடிப்படையான பொருள் யாதெனில் சிலவற்றை அல்லது சிலரை ஏற்கத்தக்கதான அடிப்படையிலோ அல்லது ஒருவேளை பரந்த அறிவிலோ "அறிதல்" என்பதாகும். இதன் ஆழமான பொருள் ஆண்டவருக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இருக்கின்ற உறவைப் போன்று ஒரு தனிப்பட்ட அறிவை சார்ந்திருக்கிறது. ஆண்டவருடைய இருதயத்தையும் அவருடைய சட்டங்களையும் அறியும் போது இப்படிப்பட்ட ஒரு உறவு சாத்தியமாகிறது (நீதி. 2:5; ஏசாயா 11:2; 58:2; எரே. 22:16; ஓசியா: 4:1, 6; 6:6). இதன் பிற்பாடு யதா எனும் சொல் கணவன் மற்றும் மனைவிக்கு இடையே உள்ள ஆழ்ந்த உறவை குறிப்பிடுகிறது. எனவே இது பாலுறவை குறிக்க ஆதியாகமத்தில் பயன்படுத்தப்படும் பொதுவான பதமாக இருக்கிறது (4:1, 17, 25; 19:8; 24:16; 38:26).

சில மொழிபெயர்ப்புகள் (NASB; NIV; NRSV) இப்பகுதியில் யதா என்பதனை "தெரிந்தெடுத்தல்" என குறிப்பிடுகிறது, எனினும் அவர்கள் 19ஆம் வசனத்தில் கூறப் பட்டுள்ள யதா என்பதன் பொருளை "அறிதல்" "தெரிந்தெடுத்தல்" என்பதனை குறிப்பிடுவது சிறப்பானதாக அமையாது என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர், ஏனெனில் ஆண்டவர் தன்னிச்சையாக அல்லது நிபந்தனையில்லாமல் சிலரை மீட்படைய தெரிந்து கொள்கிறார் (தேர்வு செய்கிறார்) தெரிந்து கொள்ளப்படாதவர்கள் வேறெ எந்த தெரிவுகளும் இல்லாமல் நித்திய தண்டனையை அடைகிறார்கள்[8] எனும் பொருளுடன் என்பதுடன் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. வெளிப்படையாகவே, 18:19ல் கூறப்பட்டுள்ள பொருள் ஆபிரகாமின் தனிப்பட்ட மீட்பிற்கான தெய்வீக தெரிவோடு (தேர்ந்தெடுத்தலோடு) தொடர்புடையதல்ல.

இதன் ஆக்கியோன் ஆண்டவர் மூதாதையர் ஆபிரகாமை தனிப்பட்ட விதத்தில் அறிந்து, ஒரு தெய்வீக நோக்கத்தை[9] நிறைவேற்றும் உள்நோக்கத்துடன் அவரோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொண்டார் என்பதனை வலியுறுத்துகிறார்.

ஆண்டவர் ஆபிரகாம் செய்ய வேண்டிய பணியின் முதற் பகுதிக்கு அடிதளத்தைப் போட்டார். சாத்தியமற்றவைகள் அனைத்தும் ஆண்டவரால் சாத்தியமாகும் எனும் விசுவாசத்திற்கு ஆபிரகாமையும் சாராளையும் வழி நடத்தினார். அதாவது முதிர்வயதிலும் வாக்குப்பண்ணப்பட்ட மகனை அவர்கள் பிறப்பிக்க முடியும் என்பதாகும். தொடக்கத்தில் இப்படியொரு யோசனையை கேட்டு அவிசுவாசத்தினால் நப்கைத்து தங்கள் விசுவாசத்துடன் அவர்கள் போராடினார்கள், ஆயினும் அவர்களின் ஐயங்களை மேற்கொள்ள ஆண்டவர் அவர்களோடு பணிபுரிதலை தொடர்ந்தார். இறுதியில் அவர்களுடைய விசுவாசம் "திடமாய் வளர்ந்ததாக" வேத பதிவுகள் நமக்குக் கூறுவதை காண்கிறோம் (ரோமர் 4:18-21); அவர்கள் "கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை" எனும் விசுவாசத்திற்கு வந்தனர் (18:14).

ஆபிரகாமினுடைய பணியின் இரண்டாம் பகுதி அவர் ஒரு போதகராக இருப்பதின் மேல் மையம் கொண்டது. அவர் தனக்குப் **பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிட வேண்டியதாக இருந்தது** (காண்க ஏசாயா 1:10-17; ஓசியா 6:4-6; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8). இது நமக்கு வியப்பை ஏற்படுத்தக் கூடாது, ஏனெனில் சமுதாயத்தின் அடிப்படை அமைப்பாக வீடு அமைந்திருக்கிறது, மேலும் ஆண்டவர் அதனை அடிப்படை கல்வி அமைப்பாகவுமிருக்க எண்ணினார். ஆண்டவரிடமிருந்து தொடங்கப்பட்ட ஆவிக்குரிய மற்றும் அறநெறி சுதந்திரத்தை பெற்றோர்கள் தங்கள் புதிய தலைமுறையினருக்கு எடுத்துரைக்க வேண்டியதாக இருந்தது (உபா. 6:1-9; எபே. 6:1-4.) அது ஒருவேளை வியப்பாக இருக்கக்கூடும், ஏனெனில் தவறான கடவுள்கள் நிறைந்த புற இன உலகில் ஆண்டவர் அவரை "கர்த்தராக" ஆராதிப்பதை வலியுறுத்தாமல் "நீதியையும் நியாயத்தையும் செய்வதை" முதன்மையானதாக வலியுறுத்துகிறார். நீதியையும் நியாயத்தையும் செய்வது அவரது முன்னெதிர்பார்ப்பாக இருந்தது, ஏனெனில் ஆபிரகாம் சுமார் அரை நூற்றாண்டுகளாக சிலை வழிப்பாட்டை விட்டு விட்டு யாவேயை ஆராதித்துக் கொண்டிருந்தார்.

சிலர் யூகிப்பதற்கு மாறாக, ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவைகள் என்பதனை ஆண்டவருடைய சொற்றொடரின் இறுதிப் பாகம் தெளிவாக எடுத்துரைக்கிறது. அவைகள் மூதாதையர் ஆபிரகாமினுடைய கீழ்ப்படிதலான

விசுவாசத்தினால் நிறைவேறியது. ஆபிரகாம் "ஆண்டவருடைய வழிகளை காத்துக் கொண்டார்" (22:15-18; 26:5; ரோமர் 4:16 ஆகிய வசனங்களை காண்க). **கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் ...** இது போன்ற செயல்பாடுகள் அவசியப் பட்டது. பூமியின் சந்ததிகளை ஆசீர்வதிக்கும் ஆண்டவருடைய திட்டம் ஆபிரகாமிலிருந்து தொடங்க வேண்டியதாக இருந்தது (12:3). அதன் பின்னர் ஆபிரகாம் அவரது குடும்பத்தில் இவைகளை ஆரம்பிக்க வேண்டியதாக இருந்தது. அதன் பின்னர் அவரது தலைமுறையினர் அவர்களுடைய குடும்பத்தினருக்கு இவைகளை எடுத்துக் கூற வேண்டியதாக இருந்தது. இறுதியாக ஆபிரகாமின் வழிமரபினராகிய இஸ்ரவேல் மக்கள் உலகத்திற்கு ஆண்டவருடைய அறிவிக்கும் வழியாக இருந்து அவர்கள் மூலமாய் தேவனுடைய அறிவு உலகம் முழுவதும் பரவ வேண்டியதாக இருந்தது (யாத். 19:4-6; ஏசாயா 42:6; 49:6).

**வசனம் 20. கர்த்தர்** தமது சொந்த வினாவிற்கு விடையளித்தார். கடந்த முறை அவர் ஆபிரகாம் கேட்காத வண்ணம் பேசி யிருந்தாரெனில், இம்முறை மூதாதையர் ஆபிரகாம் கேட்கும் வண்ணம் உரத்துப் பேசினார். **சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருக்கிறது, அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருக்கிறது**, என கூறினார். "கூக்குரல்" எனும் பதம் பொல்லாத கொடுமையாளர்கள் கைகளில் தவறான முறையில் சிக்கி அநீதியை அனுபவிக்கும் பாதிக்கப்பட்டவர்களின் கதறுதலுக்கு ஒப்பாக இருக்கிறது (யாத். 2:23; 3:7, 9; உபா. 26:7; நியா. 10:12; நெஹே. 9:9; யோபு 34:28; சங். 9:12; நீதி. 21:13). அதன் பின்னர், தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மற்றும் யூதா நாடுகள் செய்த சமூக அநீதிகளை சோதோம் மற்றும் கொமோராவிற்கு ஒப்பிட்டு கூறினார்கள் (ஏசாயா 1:3, 4, 9, 10, 21-23; எசே. 16:46-49; ஆமோஸ் 4:1, 11) புதிய ஏற்பாட்டில் சோதோம் மக்களின் பாவங்களுக்கும் குற்றங்களுக்கும் எதிராக லோத் குரல் கொடுத்ததனை குறித்து எக்குறிப்பும் காணப்படவில்லை. எனினும் பேதுரு இவர்களுடைய வாழ்வு பக்தியற்றதாகவும், சிற்றின்ப நடத்தை நிறைந்ததாகவும், சட்டங்களற்ற செயல்கள் நிறைந்ததாகவும் பண்பிடுகிறார்; இச்செயல்கள் லோத்தின் நீதி நிறைந்த ஆத்துமாவை தினமும் தொல்லைக் கொடுத்ததாக எடுத்துரைக்கிறார் (2 பேதுரு 2:6-8).

**வசனம் 21.** "சோதோம் மற்றும் கொமோராவின் கூக்குரலை" (18:20), கேட்ட பின்னர் **இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன்** என ஆண்டவர் தீர்மானித்தார் (காண்க 4:10; 11:5, 7; 19:13). இல்லையெனில் அங்கு நடக்கும் சங்கதிகளில் உண்மைகளைக் கண்டறிவேன் என கூறினார். அவசரகதியிலோ அல்லது சொற் பேச்சைக் கேட்டோ அல்லது சோதோம் மற்றும் கொமோரா ஆகிய பட்டணங்களின் சூழலை விசாரிக்காமல் தண்டனை

அளிக்கவோ செய்ய மாட்டார் என்பதனை ஆபிரகாம் புரிந்து கொள்ள வேண்டுமென ஆண்டவர் விரும்பினார். அவர் உண்மை கண்டறியும் பணியில் ஈடுபட்டு கூக்குரலின் தன்மையும், அநீதி மற்றும் குற்றத்தின் மெய்மையும் ஒன்றோடொன்று பொருந்துகிறதா எனும் ஆராய்ச்சி செய்ய முனைந்தார். ஆண்டவர் இறங்கினார் எனும் சொற்றொடரை எழுத்துப் பூர்வமாக புரிந்து கொள்ளக்கூடாது ஏனெனில் மனிதர்களைப் போன்று ஆண்டவர் இடம் மற்றும் சமயத்திற்கு கட்டுப்பட்டவரல்ல (சங். 139:7-12) மனிதர்களின் வாழ்வு எப்படியுள்ளது என்பதனை அவர் எல்லா சமயங்களிலும் பார்க்கிறார் (நீதி. 15:3; எரே. 23:24; எபி. 4:13).

**வசனம் 22. அந்த புருஷர்கள்** [தேவ தூதர்கள்] **அவ்விடம் விட்டு** சோதோமிற்கு நேராக தங்கள் பயணத்தைத் **தொடர்ந்தனர், ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார்.** யூத பாரம்பரியத்தின்படி இது எபிரெய வேதத்தில் வேதபாரகர்களால் குறை நீக்கப்பட்ட பதினெட்டு வசனங்களில் இதுவும் ஒன்று. ஏனெனில் இச்சொற்றொடர் பெரும் மதிப்பற்று காணப்பட்டது. இவ்வசனத்தின் இரண்டாம் பகுதியின் அசல் சொற்றொடர் “பின்னும் கர்த்தர் ஆபிரகாமின் முன் நின்று கொண்டிருந்நதார் என பாரம்பரியங்கள் கருதுகின்றன (NAB; NJB; TEV; NCV; CEB; NLT காண்க).[10] எப்படியாயினும், இவ்வசனம் திருத்தியமைக்கப்பட்டிருக்காமல் இருக்கலாம் இதே சொற்றொடர் மெசரொட்டிக் வசனப்பகுதியில் 18:22 மற்றும் 19:27 ஆகிய இரு வசனங்களில் காணப்படுகின்றது. பின்னர் கூறப் பட்டுள்ள வசனமானது விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் *கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்* என கூறப்பட்டுள்ளது (முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

“முன் நிற்பது” என்பது பழைய ஏற்பாட்டில் பொதுவான வெளிப்பாடாக இருக்கிறது. ஆண்டவருக்கு “முன்பாக நிற்பதென்பது” சில சமங்களில் அவரை பணிந்துக் கொள்வது (எரே. 7:10), அவருடைய சமூகத்தில் பிரவேசிப்பது (உபா. 19:17; 29:14, 15) அல்லது அவரை சேவிப்பது (1 இராஜா. 17:1; 18:15; 2 இராஜா. 3:14; 5:16), என்று பொருள்படுகிறது. இங்கே இப்பதம் வேறொரு பொருளில் பயன்படுத்தபட்டு ஒரு தீர்க்கதிரிசியின் பரிந்து பேசும் ஊழியத்தை பரிந்துரைக்கிறது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் “மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது,” என எரேமியாவிடம் கூறினார் (எரே. 15:1). அதன் பிறகு அதே அதிகாரத்தில் எரேமியா தனிமையில் அமர்ந்து அவர் சினங் கொண்டு சோர்வானார், ஏனெனில் ஆண்டவருடைய பிள்ளைகள் அவருடைய செய்தியை புறக்கணித்து அவரை துன்புறுத்தினர். நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப் போலவும், வற்றிப்போகிற ஜலத்தைப்போலவும் இருப்பீரோ? என அவருடைய விரக்தியில் அவர் ஆண்டவருக்கெதிராக

தாக்குதல் தொடுத்தார் (எரே. 15:18) ஆனால் ஆண்டவர் இந்த தீர்க்கதரிசியை ஏமாற்றவில்லை, உண்மையில் தம்முடைய பிரதிநிதியாக இருப்பதற்காகவே ஆண்டவர் அவரை அழைத்தார், நாட்டின் தலைவர்களும். மக்களும் அவரையும் அவருடைய செய்தியையும் எதிர்த்து போராடுவார்களென யாவே ஏற்கெனவே கூறியிருந்தார். இவ்வாறான போராட்டத்தின் நடுவிலும் "நான் உன்னை விடுவிக்க உன்னோடு இருக்கிறேன்" (எரே. 1:8, 17-19), என்று தமது ஊழியருக்கு வாக்குப் பண்ணியிருந்தார். மேலும் ஒவ்வொரு இக்கட்டிலும் ஆண்டவர் அவரை காப்பாற்றியிருந்தார். எனவே யாவே எரேமியாவை "இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன், என் முகத்துக்குமுன்பாக நிலைத்துமிருப்பாய்," என கூறி கடிந்து கொண்டார் (எரே. 15:19). வேறு விதத்தில் கூறுவதெனில் ஒருவேளை அவர் ஆண்டவருக்கெதிராக கூறின கடினமாக குற்றச்சாட்டிலிருந்து மனந்திரும்பினால் அவருடைய தீர்க்கதரிசன ஊழியத்தினை தொடர்ந்து செய்து பாதை மாறிய ஆண்டவருடைய மக்களுக்காக பரிந்து பேசலாம் என கூறினார்.

18:22ல் கூறப்பட்டுள்ள ஆபிரகாமின் "கர்த்தருக்கு முன்பாக நிற்பது" என்பது எரேமியா ஆண்டவருக்கெதிராக கூறின வெறுப்பு, முறுமுறுப்பு, மற்றும் தவறான குற்றச்சாட்டை போன்றல்லாமல் யூதா இராஜ்ஜியத்தின் கடைசி காலத்தில் பணிபுரிந்த தீர்க்கதரிசியின் பணிக்கு ஒப்பாக இருக்கிறது. எனினும் இவ்விரு மனிதர்களும் கடின சூழல்களில் யாவேயின் நீதியான மற்றும் நியாயமான செயல்களை உறுதிப்படுத்த வேண்டியதாக இருந்தது. ஆண்டவர் எரேமியாவை உபத்திரவத்தை அனுபவிக்க அனுமதித்தார், ஆனால் ஆபிரகாம் சோதோம் மற்றும் கொமோரா பட்டணங்கள் அழிகையில் லோத்தும் அவரது இல்லத்தினரும் அழிவுறுவதைக் குறித்து கவலையுற்றார்.

## சோதோம் மற்றும் கொமோராவிற்காக ஆபிரகாம் பரிந்துரைத்தது (18:23-33)

**23அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே**
**நீதிமானையும் அழிப்பீரோ? 24பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது**
**நீதிமான்கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது**
**நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ?**
**25துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத்**
**தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய்**
**நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி**
**நீதிசெய்யாதிருப்பாரோ என்றான். 26அதற்குக் கர்த்தர்: நான்**
**சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம்**
**அந்த ஸ்தலமுழுதையும் இரட்சிப்பேன் என்றார். 27அப்பொழுது**

**ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன். [28]ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்து பேர் நிமித்தம் பட்டண முழுதையும் அழிப்பீரோ என்றான். அதற்கு அவர்: நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார். [29]அவன் பின்னும் அவரோடே பேசி: நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.**
**[30]அப்பொழுது அவன்: நான் இன்னும் பேசுகிறேன், ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக; முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார்.**
**[31]அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்; இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: இருபது நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.**
**[32]அப்பொழுது அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்; பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். [33]கர்த்தர் ஆபிரகாமோடே பேசிமுடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்.**

**வசனங்கள் 23, 25. ஆபிரகாமை** சிறப்பாக விருந்தளிப்பவராக **மோசே** எடுத்துக் காட்டினார், ஆனால் இங்கு லோத்தும் அவரது குடும்பத்தாரும் சோதோமை தங்கள் இருப்பிடமாக கொண்டிருந்தபடியால் அந்த பொல்லாத சோதோம் பட்டணத்திற்காக பரிந்து பேசும் ஒரு மனதுருக்கமுள்ள தீர்க்கதரிசியாக அவரை சித்தரிக்கிறார் (20:7ஐ காண்க). ஆண்டவர் தமது தண்டனையை விலக்கிக் கொள்ள வேண்டுமெனும் யோசனையை மூதாதையர் ஆபிரகாம் பரிந்துரைக்கவில்லை, மேலும் யாவேயின் நீதியையும் ஆபிரகாம் வினாயெழுப்பவில்லை. **துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?** (18:23) எனும் வினா ஆண்டவர் துன்மார்க்கரோடு நீதிமான்களை நாசம் செய்திடுவாரோ எனும் கவலையை வெளிப்படுத்துகிறது. மூதாதையர் ஆபிரகாமின் பார்வையில் மெய் நியாயத்தீர்ப்பென்பது ஆண்டவர் பொல்லாதவர்களையும் நீதிமான்களையும் வேறுபடுத்தி பார்க்க நீதி (צַדִּיק, *tsaddiq*, ட்சட்டிக்) அவசியம் என்பதனை வலியுறுத்தி, நீதிமான்களை பாதுகாத்து பொல்லாதவர்களை அழிக்க வேண்டும் என்பதாக இருக்கிறது. நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேறுபாடு எனும் கருப்பொருள் வேதாகமத்தில் பல முறை காணப்படுகின்றது, மேலும் அது இறுதி நாளில் நடை பெறும் இறுதி நியாயத்தீர்ப்பிற்கு அடிப்படையானதாக

இருக்கிறது (வெளி. 20:11-15; 21:7, 8, 27; 22:11-15).

அவர்களுடைய பாவத்தின் ஈர்ப்பை குறித்து ஆண்டவருடைய மதிப்பீட்டை அவர் விவாதிக்க முயற்சிக்கவில்லை, எனவே அநேகமாக சோதோமின் பொல்லாப்பைக் குறித்து ஆபிரகாம் ஏற்கெனவே அறிந்திருக்கக்கூடும் (13:13). எப்படியாயினும், அவருடைய மனதில் அங்கு குடியிருந்த லோத்தும் அவரது இல்லத்தினரும் முதன்மையானவர்களாக இருந்தனர். அதிகாரம் 19ல் பதிவிட்டுள்ளபடி இந்த மூதாதையரின் உறவினராகிய லோத்து உயர் நீதிமான்களின் பட்டியலில் மேன்மையான இடத்தைப் பெறவில்லை, ஆனால் மறுபக்கத்தில் பண்டைய சோதோமின் குடிகளோடு லோத்தை ஒப்பிடுகையில் பேதுரு இவரை "நீதிமானாக" (δίκαιος, *dikaios*, டைக்கயோஸ், ட்சட்டிக்-க்கு சமமான சொல்) எண்ணுகிறார் (2 பேதுரு 2:6-8). இவ்வகையான முரண்பாடு சட்ட நூல்களிலும், தீர்க்கதரிசன நூல்களிலும், மற்றும் சங்கீதங்களிலும் காணப்படுகின்றது, எடுத்துக்காட்டாக "நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார் … துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப் போடுகிறார்" (சங். 146:8, 9).

ஆபிரகாம் சோதோமிற்கான பரிந்து பேசுதலில், நீதிமானையும் துன்மார்க்கனையும் ஆண்டவர் ஒன்று போல நடத்துவது கற்பனைக்கெட்டாததென மூன்று முறை சுட்டுகிறார். ஒவ்வொரு முறையும் அவர் இந்த எண்ணத்திற்கு வந்து, இது போன்றதொரு செயலுக்கு அவரது ஆட்சேபனையை தெரிவிக்க மொழி நடையை மாற்றுகிறார். முதலில் ஒருவேளை துன்மார்க்கரோடு நீதிமான்களையும் ஆண்டவர் அழிக்கக் கூடுமோ என கேட்டார் (18:23). இந்த வினா ஆண்டவருடைய பகுதியை மேற்பார்வை யிடுவதுப் போன்று தோன்றுகிறது; ஒருவேளை ஆண்டவர் கவனக்குறைவாக அவரது சினத்தை துன்மார்க்கரோடு சேர்ந்து நீதிமான்கள் மீதும் ஊற்றிவிடுவாரோ என்பதனை குறிப்பிடுகிறது.

இரண்டாவது ஆட்சேபனை வலிமை நிறைந்ததாக இருந்தது; ஆண்டவர் **துன்மார்க்கரோடு நீதிமான்களையும் சங்கரித்து**, இருவரையும் **சமமாக நடத்தக் கூடுமோ** என எண்ணி ஆபிரகாம் பயந்தார் (18:25). "சங்கரிப்பது" (מוּת, *muth*, முத்) என்பது "கொன்று விடுவது" என பொருளாகும், பிற்பாடு இப்பதம் மரண தண்டனைக்கு பாத்திரமான குற்றவாளிகளை ஆண்டவருடைய திருச்சட்டத்தின்படி கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது (லேவி. 20:2; எண். 35:19, 21). ஆபிரகாமின் கேள்வியினுடைய யூகத்தின் அடிப்படை யாதெனில் நீதியாய் வாழ்கின்ற ஒருவர் சீர்கெட்ட சமூகத்தை கட்டிக்காக்கும் தார்மீக பொறுப்பில் இருக்கிறார், அப்படியில்லாவிட்டால் அச்சமூகம் ஆண்டவருடைய தண்டனையால் எச்சரிக்கப்படக்கூடும். அவருடைய சிந்தனையின்படி மீந்திருக்கும் சில பரிசுத்தர்களாக பத்து நீதிமான்கள் அவருக்கு துன்மார்க்கர் பலரைக் காட்டிலும் முக்கியம் வாய்ந்தவர்களாக

இருந்தாக வேண்டும். உலகின் ஜாதிகள் ஆபிரகாமின் சந்ததியின் வழியாய் ஆசீர்வாதத்தை கண்டடைய இருக்கையில், அப்பட்டமான குற்றங்களை குறித்து ஒன்றுமறியாமலிருக்கிற அதன் சக குடிமக்களின் வாழ்வில் சோதோமின் குற்றம் இரக்கத்தை கண்டடைய வேண்டுமென அவர் நினைத்தார். துன்மார்க்கரின் சார்பில் மத்தியஸ்த பணி செய்ய நீதிமான்கள் வாழ்கின்றனர் என ஒரு விதத்தில் கூறலாம்.

ஆபிரகாம் எழுப்பின மூன்றாம் ஆட்சேபம் முன்னர் கூறினதற்கு ஒத்திருந்தது: நீதிமான்களையும் துன்மார்க்கரையும் ஆண்டவர் ஒன்றுபோல நடத்துவதென்பதனை அவர் சற்றும் நினைக்க வில்லை. அப்படிப்பட்ட ஒரு சிந்தை அவருக்கு வெறுப்பைத் தந்தது, **நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக, சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யா திருப்பாரோ** (18:25) என அவர் குறுக்கிடுகையில் அவரது பேரார்வம் தெளிவாக இருந்தது. இதன் சாராம்சம் என்னவெனில் ஆண்டவர் நீதிமானை சங்கரித்தால் (கொன்றால்) அவர் தமக்கு தாமே கண்டனம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்பது இந்த மூதாதையரின் வேண்டுகோளாக இருந்தது. உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்த யாவே மனிதனோடு தொடர்புடைய அவருடைய அனைத்து செயல்களிலும் நீதியுள்ளவராக இருக்கிறார் என்பதே வேதத்தின் அடிப்படை சத்தியங்களில் ஒன்றாக இருக்கிறது. ஒரு சில சமயங்களில் அவர் அநீதியுள்ளவராக காணப்பட்டாலும் மேற்கண்ட சத்தியம் உண்மையுள்ளதாக இருக்கிறது (உபா. 32:4, 5; சங். 9:7-9; 96:10; 97:1, 2; ரோமர் 2:5-11).

**வசனங்கள் 24, 26-33. ஐம்பது நீதிமான்கள்** குடியிருந்தால் சோதோமை அழிப்பீரோ என ஆபிரகாம் ஆண்டவரை குறுக்கு விசாரணை செய்தார் (18:24). திட்டத்திற்கு ஆண்டவர் ஒப்புதல் அளித்துவிட்டபடியால் பாதுகாப்பாக உணர்ந்தார் (18:26), ஒருவேளை **நாற்பத்து ஐந்து** நீதிமான்கள் அங்கு காணப்பட்டால் தண்டனையை நீக்குமாறு மூதாதையர் ஆபிரகாம் யாவேயை வலியுறுத்தினார் (18:28). ஆண்டவர் மீண்டுமாக ஆபிரகாமின் பரிந்துரைக்கு இணங்கினார்; மூதாதையர் ஆபிரகாம் “ஐம்பதி லிருந்து” “நாற்பத்தைந்திலிருந்து” **நாற்பதென** இருமுறை ஐந்து எண்களை குறைத்தார் (18:29).

மூதாதையர் ஆபிரகாம் அகந்தையுள்ளவராகவோ அல்லது இப்படி கேள்விக்கு உட்படுத்துதலால் ஆண்டவருடைய மதிப்பினை குறைக்கிறவராகவோ காணப்பட விரும்பவில்லை; எனவே அவர் இதோ, **தூளும் சாம்பலுமாயிருக்கிற** அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன் என அறிக்கையிட்டார் (18:27) இந்த வார்த்தைகள் அவருடைய பலவீனங்களை எடுத்துக்காட்டுகிறது; அவர் “மரணத்திற்கு திட்டமிடப்பட்டு தூளுக்கு திரும்புகிறார்” (2:7; 3:19; யோபு 30:19; சங். 103:14).[11] எப்படியாயினும் ஆபிரகாம் ஒரு நேர்மறையான பதில்களை

பெற்றதினால், இன்னும் கொஞ்சம் துணிவு கொண்டு நாற்பதிலிருந்து முப்பது, **முப்பதிலிருந்து இருபது, இருபதிலிருந்து பத்து** என எண்களை மும்முறை குறைத்தார் (18:30-32). மூதாதையர் ஆபிரகாம் பிரச்சனையில் அழுத்தம் கொடுப்பதனை தொடருகையில், அவர் முரட்டாட்டமுள்ளவராக இல்லாமல் மன்னிப்பு கோருகிறவராக காணப்பட்டார், மேலும் சோதோமிலுள்ள நீதிமான்களுக்கு இரக்கத்திற்காக தொடர்ந்து வேண்டுகையில் அவர் மீது **சினம் கொள்ள வேண்டாமென** இருமுறை ஆண்டவரைக் கேட்டுக் கொண்டார் (18:30, 32).

அவரது இறுதி வேண்டுகோளிற்கு முன்னர் ஆண்டவரை கேள்வி கேட்கும் துணிவின் அளவை அடைந்துவிட்டதாக உணர்ந்தார். ஆகவே அவர் மீண்டும் ஒரு முறை சோதோமின் அழிவை குறித்து மட்டுமே பேசுவதாக ஆண்டவரிடம் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் அவர் "பத்து" நீதிமான்கள் **காணப்பட்டால்** அந்த பட்டணத்தை அழிக்காமல் விட்டு விடும் வாய்ப்பினை பற்றி ஆண்டவரிடம் கேட்டறிந்தார் (18:32). ஆண்டவர் மூதாதையரின் இந்த ஆய்வு மிக்க வினாக்களை தாங்கிக் கொண்டு, பிற்காலத்தில் பேதுரு கூறினது போன்று நியாயத்தீர்ப்பில் ஒரு விதமான பொறுமையை விளக்குகிறார் (2 பேதுரு 3:9). வேறு விதமாக கூறுவதென்றால் "ஆண்டவர் அன்பாக" இருப்பதினால் (1 யோவான் 4:8) அவரது முதல் நாட்டம் தண்டிப்பது அல்லது அழிப்பதில் இராமல், அவரது பரிசுத்தம் மற்றும் நீதியுடன் சமரசம் செய்து கொள்ளாத வரை மன்னிக்கவும் மீட்கவும் வேண்டும். இதன் பொருள் என்னவெனில் எதனைக் குறித்தும் கவலைப்படாமல் பாவத்தை மட்டும் கண்ணிமைக்காமல் பார்க்கிற பாட்டனாராக மக்கள் அவரை பார்ப்பதற்கு எக்காரணமும் எப்போதும் இராத வண்ணம் ஆண்டவர் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். **கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார், ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும் பினான்** (18:33). அதாவது "மம்ரேயின் சமபூமிக்கு திரும்பினார்" (18:1).

## நடைமுறை

### விசுவாச மனிதன் (அதிகாரம் 18)

*விசுவாச மக்கள் எதிர்பாராமல் வந்த விருந்தாளிகளுக்கு கிருபை நிறைந்த மறுமொழியினை அளிக்கின்றனர்* (18:1-8). ஆபிரகாம் பகலில் உஷ்ண வேளையில் அவரது கூடார வாசலில் ஓய்வெடுக்கும் போது அவருக்கு தீடீரென காட்சி தந்த மூன்று வழிப்போக்கர்களைக் கண்டு வியப்புற்றார். அவர்கள் ஆண்டவரால் அனுப்பப்பட்ட விண்ணக விருந்தினர் என்பதனை அறியாமல், அவர்களை வரவேற்க ஓடிச்

சென்றார். அவர்களை ஏற்றுக்கொண்டு ஆடம்பரமான விருந்து அளித்ததின் மூலம் விசுவாச மக்களுக்கு எல்லாம் ஒரு முன் மாதிரியாக மாறினார்.

எபிரெய நிருபத்தின் ஆக்கியோன் அவரது மனதில் ஆபிரகாமை வைத்துக் கொண்டு “அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள், அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு” (எபி. 13:2) என கூறி தங்கள் உடன்பிறப்புகளை “புறக்கணியாமல்” அவர்களை அன்புகூரும்படிக்கு கிறிஸ்தவர்களை ஊக்கமூட்டுகிறார். தம்மை பின்பற்றுகிறவர்கள் மூதாதையர் ஆபிரகாம் செயல்விளக்கப்படுத்தினது போன்று உபசரிப்பின் செயல்களை செய்ய வேண்டுமென ஆண்டவர் எதிர்பார்க்கிறார். பசியுடனும் தாகத்துடனும் இருக்கிற அந்நியர்களை நாம் உபசரிக்கும் விதம் ஆண்டவர் மேலுள்ள நமது அர்ப்பணிப்பை அல்லது அர்ப்பணிப்பின்மையை பிரதிபலிக்கிறது. நாம் பசியுற்றோருக்கு உணவளிப்பதும், தாகமடைந்தோருக்கு தண்ணீர் கொடுப்பதும், அந்நியர்களை வீடுகளில் ஏற்றுக் கொள்வதும் அவருடைய நியாயத்தீர்ப்பின் நாளின் போது சீஷர்களை சோதிக்கும் சில சோதனைகளில் ஒன்றாக இருக்கிறது (மத். 25:35) நியாயத்தீர்ப்பினை இயேசு விவரிக்கையில், அதற்கு இராஜா பிரதியுத்தரமாக: “மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என கூறுகிறார் (மத். 25:40).

*ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் நம்புவதற்கு இயலாதவைகளானாலும், விசுவாச மக்கள் அவைகளை விசுவாசிக்க கற்றுக் கொள்ள வேண்டும்* (18:9-15). அடுத்த ஆண்டுக்குள் ஒரு குமாரனைப் பெறுவாரென ஆண்டவர் கூறினப் போது, ஆபிரகாமைப் போன்று (17:17) அவரும் அவிசுவாசத்தில் நகைத்தார். வயது சென்ற இருவரும் சாராள் எண்பத்தொன்பது வயதிலும் ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதிலும் இயற்கையாக குழந்தை பெறுவதற்கு எவ்வழியுமில்லை. இவ்விதமான அவநம்பிக்கைக்கு யாவேயின் பதில் “கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுண்டோ?” என்பதாக இருந்தது (18:14). அவர்களுடைய குழந்தைப் பெறும் செயல்களில் உடல் “செத்துப் போனதாக” இருந்தாலும் நம்பிக்கைக்கு எதிராக நம்பிக்கை கொண்டனர், ஆபிரகாம் (மற்றும் சாராள்) “அவரால் கூடும்” என உண்மையாகவே நம்பினர் (ரோமர் 4:18-24). முதலில் அவர்கள் கேட்டப் போது விசுவாசிக்கக் கூடாதவைகளாக இருந்தாலும், ஈசாக்குப் பிறந்தப் போது ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் நிலை நாட்டப்பட்டது, பவுலும் அவிசுவாசத்தைக் குறித்து எடுத்துக் கூறியுள்ளார்.

அதிலும் மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்து சிறப்பாக எடுத்து விளக்கியுள்ளார், கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையில்

மரித்தோர் அனைவரும் உயிர்த்தெழுவர் எனும் அவருடைய போதனைகளை கேட்போர் சில சமயம் ஐயமுற்றதுண்டு நித்திய வாழ்விற்காக உயிர்த்தெழுதலெனும் எண்ணத்தை குறித்து போராடிக் கொண்டிருந்த புற இனத்தவர்களுக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சான்றுப்படுத்தி பவுல் விரிவாக எழுதியுள்ளார் (1 கொரி. 15ஐக் காண்க), காரணம் எதுவாயினும் ஆண்டவரைக் குறித்த நம்பிக்கையற்ற மனமுடையோர் சரீர உயிர்த்தெழுதலின் சாத்தியக்கூறுகளை மறுக்கின்றனர்.

கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்கிற சிலரும் இவ்விதமான எண்ணத்தை புறக்கணிக்கின்றனர், எப்படியாயினும் தொடக்கக்கால திருச்சபையின் ஒன்றுபட்ட செய்தி சரீர உயிர்த்தெழுதலின் கோட்பாட்டைக் குறித்து போதிப்பதாக இருந்தது. முதலாம் நூற்றாண்டு மக்களுக்கு அவை நம்பக் கூடாதவைகளாக இருப்பினும்; இதனை நம்புவதற்கு ஊக்கமூட்டும் சாட்சிகள் எல்லா காலங்களிலும் நம்பத்தகுந்த காரணங்களை அளித்திருக்கிறது.

முதலில் ஆண்டவர் மற்றும் இயேசு ஆகிய இருவரும் கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுவாரென வாக்குப் பண்ணியிருந்தனர் (ஏசாயா 53:1-12; மத். 16:21; யோவான் 10:17, 18; அப். 2:22-24, 29-31).

இரண்டாவதாக, ஆண்டவரும் ஐநூறு இதர சாட்சிகளும் சிலுவையிலறையப்பட்ட இயேசுவை உயிரோடு பார்த்ததாக சாட்சியிடுகின்றனர். அது மட்டமில்லாமல் சிலர் அவரை தொட்டனர், அவரோடு கூட உணவருந்தினர் (லூக். 24:33-43; யோவான் 20:19, 20, 24-29; அப். 2:32-36; 9:1-6; 22:6-10; 1 கொரி. 15:1-8).

மூன்றாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருந்தவர்களுக்கு அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து பொய்யுரைப்பதனால் எவ்வித வளமோ, புகழ்ச்சியோ, அல்லது பதவியும் கிடைக்கப் போவதில்லை. மாறாக அவர்கள் நண்பர்கள், குடும்பம், சொத்து, மற்றும் அவர்களுடைய வாழ்வுட்பட அனைத்தையும் இழக்க வேண்டியதாயிருந்தது. இயேசுவை அவர் மரித்த பிறகும் பார்த்தோமென சாட்சியிட்டதனை நிறுத்தாத தினிமித்தம் அவர்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியதாக இருந்தது.

நான்காவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலுக்கும் நம்முடைய எதிர்கால முடிவிற்கும் அங்கீகாரம் அளிக்கிறது. அதுவே நற்செய்தியாக இருக்கிறது; அது இல்லாவிடில் இன்னும் நாம் நம்முடைய பாவத்தில் இருந்திருப்போம், நம்முடைய விசுவாசம் வீணாய்போம், நம்முடைய வாழ்வு வெறுமையானதாக இருக்குமென பவுல் எடுத்தரைத்திருக்கிறார் (1 கொரி. 15:14-22). இவ்வுலகத்தில் பலர் நம்பிக்கையளிக்காத ஐயங்கொள்ளும் பண்பினை தொடர்ந்து பிடித்துக் கொண்டு வாழ்கின்றனர். எப்படியாயினும் கிறிஸ்தவர்களுக்கு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால்

மரணத்தின் கூர் முறிக்கப்பட்டு விழுங்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது. பாவம் மற்றும் மரணத்தின் மீது அவருடைய ஆர்ப்பரிப்பில் நாம் பங்குக் கொள்கிறோம் மேலும் "இவை யெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 8:37; காண்க 1 கொரி. 15:54-57)

*பொல்லாதவர்கள் மேல் ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு நீதியானதென்பதனை விசுவாச மக்கள் புரிந்திருக்கின்றனர்* (18:16-22). நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (18:17) என யாவே கூறினார். இரண்டு காரணங்களுக்காக ஆண்டவர் அவரது திட்டத்தை மூதாதையர் ஆபிரகாமோடு பகிர்ந்து கொள்ள விரும்பினார் (1) ஆபிரகாம் "ஒரு பெரும் ஜாதியாகப் போகிறார்" மேலும் அவருக்குள் "பூமியிலுள்ள சகல ஜாதிகளும்" ஆசீர்வதிக்கப்படப் போகிறது (18:18). ஆகவே பெருமளவு மக்கள் (சோதோம், கொமோரா மற்றும் யோர்தான் பள்ளதாக்கில் உள்ள இதர பட்டணங்கள்; 19:24, 25) தங்கள் பொல்லாப்பினால் அழிக்கப்படப்போகின்றனர், இது போன்ற ஒரு தெய்வீக நடவடிக்கைக்கு ஆண்டவர் மூதாதையர் ஆபிரகாமிடம் விளக்கமளித்தார். (2) கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிட வேண்டியதாக இருந்தது (18:19). மனிதருக்கு ஆண்டவர் அளிக்கும் வாக்குத்தத்தங்கள் ஏறக்குறைய அனைத்தும் எப்போதும் நிபந்தனைக்குட்பட்டதாகவே இருக்கிறது; ஆண்டவர் தமது ஆசீர்வாதங்களை முரட்டாட்டமுள்ள மக்கள் மீது கட்டாயப்படுத்தி சுமத்துவதில்லை. ஆண்டவர் ஆபிரகாமின் வழிமரபினரை ஆசீர்வதிக்க அவர்களின் தினசரி வாழ்வில் நீதியாக நடக்கவும், நியாயத்தை பயிற்சிக்கவும் "கர்த்தருடைய வழிகளை" அவர் கற்றுக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை சுதந்தரித்துக் கொள்ளவும், ஆசீர்வாதங்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் தொடரவும் இவைகள் நிபந்தனைகளாக இருந்தன (உபா. 28:1, 2, 15, 16, 36, 37; 1 சாமு. 15:22, 23; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8).

அவருடைய மக்கள் நீதியாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டுமென ஆண்டவர் எதிர்ப்பார்ப்பதற்கு ஒரு காரணம் யாதெனில் அவர் இயல்பில் பரிசுத்தராயும், நீதியுள்ளவராயும் நியாயமுள்ளவராயும் இருக்கிறார். யாவேயின் சாயலில் உருவான மக்கள் அநியாயக்காரராயும் பொல்லாதவர்களாயும் இருக்கையில், அதுப் போன்ற வாழ்வு முறை அவருடைய பண்புகளில் பிரதிபலிக்கிறது (லேவி. 19:2, 13-18, 29-37; ஏசாயா 1:16-23; ஓசியா 4:1-4) இஸ்ரவேலர்கள் சிலை வணக்கத்திற்குள் சென்று ஆண்களோடும்

பெண்களோடும் விபச்சாரத்தில் ஈடுபடுதல் தங்கள் பிள்ளைகளை நரபலியிடுதல் போன்ற அனைத்து பொல்லாத செயல்களை பயிற்சிக்கையில் புற இனத்தவர் மத்தியில் ஆண்டவருடைய திருபெயர் தூஷிக்கப்படுகிறது (லேவி. 18:1-30; 2 இராஜா. 23:1-27; 24:1-4; ஏசாயா 52:5; எசே. 36:20; ரோமர் 2:24).

ஆண்டவர் வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களையும் வாக்குப்பண்ணின தண்டனைகளையும் அவரது மக்களை உண்மையான மனமாற்றத்திற்கு கொண்டு வர பயன்படுத்தினார். அவருக்கேற்ற துக்கம் அவர்களுடைய இருதயத்திலும் வாழ்விலும் மாற்றத்தை உண்டாக்குமென விரும்பினார். எப்படியாயினும் அவர் எவ்வளவுக்கதிகமாய் அழைத்தாரோ (தீர்க்கதரிசிகளின் வாயிலாக) அவ்வளவுக்கதிகமாய் அவர்கள் அவரை விட்டுத் தூரச் சென்றனர் (ஓசியா 11:1-7). ஒரு சோகமான கடின இருதயம் அவர்களுக் குள்ளிருந்து மனந்திரும்புதலுக்கு இடமற்றுப் போனது. யூதாவும் இஸ்ரவேலும் அவர்களின் ஆலயத்தை இழந்து, ராஜ்ஜியத்தை இழந்து, நாட்டை இழந்து, மற்றும் சுதந்திரத்தை இழந்து, அயல் நாட்டிற்கு சிறைப்பட்டுப் போனதற்கு இவைகளே காரணமாக அமைந்து போயின.

*நீதிமான்கள் துன்மார்க்கரோடு அழிந்துப் போகா வண்ணம் விசுவாச மக்கள் அவர்களுக்காக ஆண்டவரிடம் பரிந்துபேசுகிறார்கள்* (18:23-33). சோதோம் மற்றும் கொமோரா விற்குள்ளோ அல்லது அருகிலோ நீதிமான்கள் இன்னும் வாழ்கின்றனர் அவர்கள் துன்மார்க்கர் மீது ஆண்டவருடைய தண்டனை விழுகையில் அவர்களோடு கூட அழிந்துபோகும் அபாயத்தில் இருக்கின்றனரென ஆபிரகாம் நம்பினார். எனவே அவர் இந்த பட்டணங்கள் தெய்வீக தண்டனையின் அடிப்படையாக இருக்கிறபடியால், துன்மார்க்கரின் அதே கதியை நீதிமான்களும் அனுபவிக்க ஆண்டவர் அனுமதிக்க மாட்டாரென விசுவாசித்து ஆண்டவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மனந்திரும்பி பேழைக்குள் பிரவேசித்து தங்களை காத்துக் கொள்ள பெருவெள்ளத்திற்கு முந்தைய உலகத்தின் குடியினருக்கு எச்சிக்கை விடுக்க ஆண்டவரால் “நீதியின் பிரசங்கியாக” நியமிக்கப் பட்ட நோவாவின் சம்பவத்தைக் குறித்து ஆபிரகாம் நிச்சயமாக கேள்வியுற்றிருப்பார் (2 பேதுரு 2:5). இந்த நிகழ்வில் துன்மார்க்கப் பட்டணத்தின் மேல் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை குறித்து எடுத்துரைக்க போதிய சமயமில்லை என்பதனை ஆபிரகாம் நன்கு உணர்ந்திருந்தார். தற்போது அவரால் செய்ய முடிந்தது எல்லாம் யோர்தான் பள்ளத்தாக்கில் உள்ள பட்டணங்களின் மீது யாவேயால் அனுப்பப்படப்போகிற அழிவிலிருந்து விலக்கிக்காக்க நீதி மானாகிய லோத்திற்காகவும், அவருடைய இல்லத்தினருக்காவும், மற்றும் ஒருவேளை ஒரு சிலருக்காகவும் பரிந்து பேசுதல் ஒன்றேயாகும்.

எமோரியர்களின் அக்கிரமம் “முழுமையடையாதபடியால்”

இதுவரைக்கும் ஆண்டவர் அவர்களை விட்டு வைத்திருக்கிறார் என்பதனை ஆபிரகாம் புரிந்திருக்கக்கூடும் (15:16). ஒருவேளை அவர் புற இனத்தார்களின் (14:18) நடுவே "உன்னதமான தேவனை" வர்ணித்த சாலேமின் அரசரும் ஆசாரியருமாகிய மெல்கிசேதேக்கை நினைவு கூர்ந்திருக்கக்கூடும். இந்த புற இன ஆசாரியர் ஐயத்திற்கிடமின்றி நீதியின் அரசராக இருந்தார் (எபி. 7:2 காண்க), மேலும் அவருடைய பகுதி மக்களின் மேல் பாதுகாக்கும் தாக்கம் உள்ளவராக இருந்தபடியால், ஒருவேளை ஆண்டவர் சோதோம் கொமோரா பட்டணத்தில் போதுமான நீதிமான்கள் வாழ்ந்திருந்தால் அந்த பட்டணங்களை அவர் தண்டிக்காமல் விட்டுவிடக் கூடுமென முடிவிற்கு வந்தார். ஒழுக்க நன்நெறி ஒரு சிலரில் இருந்தாலும் அது துன்மார்க்கரின் சமூகத்தை பாதுகாக்கும் பெரும் வல்லமையாக செயல்படுகிறது. நீதிநிறை நியாயாதி பதியாகிய ஆண்டவர் தீயோர் மீது தமது சினத்தை ஊற்றும் முன்னர் இதனை அவரது கவனத்தில் கொள்வார்.

தங்களுக்குள்ளும் ஆண்டவருடைய சாயலைப் பெற்றிருக்கிற, பாவம் நிறைந்த மக்களுக்காக மூதாதையரின் பரிந்துபேசுதலானது, அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும், சக மனிதர்களின் மேலுள்ள பச்சாதாபத்தையும் காட்டுகிறது, மேலும் இது மற்றவர்களைக் காட்டிலும் தன்னை உயர்த்துகிற எல்லா அகந்தையையும், மற்றவர்கள் தங்கள் பாவத்திற்காகவும் குற்றத்திற்காகவும் தண்டனை அனுபவிக்கையில் மகிழ்வுறு தனையையும் புறந்தள்ளுகிறது. பிற்பாடு பவுல் கூறினது போன்று, உண்மையான அன்பு "அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்" (1 கொரி. 13:6). இது நமது சொந்த பாவங்களையும் குறித்து தாழ்மையான விழிப்புணர்வை உணர்த்துகிறதாகவும் நாம் பெறுவதற்கு தகுதியானவற்றை ஆண்டவர் கொடுக்காததினால் அவருக்கு நன்றி நிறைந்தவர் களாவும் இருக்கச் செய்கிறது. ஒரு பாவியாக எப்போதும் மரணத்தை மட்டுமே நாம் பெற வேண்டியதாக இருக்கிறது (ரோமர் 6:23). எனவே நாம் தீயோர் மீதான தெய்வீக கோபாக்கினையின் சமூகத்தின் முன் நின்று நாம் சொல்லக்கூடியதெல்லாம் "ஆண்டவருடைய சுத்த கிருபையினால் மட்டுமே நான் நிற்கிறேன்" என்பதாகும். ஐயத்திற்கு இடமின்றி ஆபிரகாமின் இந்த அணுகுமுறை தான் அவரை சோதோம் கொமோராவின் குடிகளுக்காக பரிந்து பேச வைத்தது.

துன்மார்க்கரின் நடுவில் நீதிமான்களின் எதிர்காலத்தினை குறித்த ஆபிரகாமின் கவலை வேதத்தின் பெரும் மனிதர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது. பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டின் உச்சமாகிய மோசே, இஸ்ரவேல் மக்களுக்காக சமயம் வாய்க்கும் போதெல்லாம் பரிந்துப் பேசியிருக்கிறார். யோசுவாவும் இதனைத் தொடர்ந்தார், சாமுவேலும், தாவீதும், சாலொமோனும், மற்றும் எலியா, எலிசா, ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகளும் அப்படியே செய்தனர்.

புதிய ஏற்பாட்டில் இயேசு தமது மலை பிரசங்கத்தில் உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக பரிந்துபேச கட்டளையிட்டிருக்கிறார் (மத். 5:44). சோர்வுற்ற மற்றும் ஒடுக்கப்பட்ட திரள் கூட்ட மக்களைக் குறித்து அவர் சிந்திக்கையில் அறுவடையின் ஆண்டவரை அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுங்கள் என சீஷர்களுக்கு கூறினார் (மத். 9:36-38). சிலுவையின் நிழலில் பேதுருவின் விசுவாசம் “ஒழிந்துப் போகாதவண்ணம்” வேண்டிக் கொண்டார் (லூக். 22:31, 32). அவருடைய சீஷர்களை ஆண்டவர் தீயோரிடமிந்து பாதுக்காவும், சத்தியத்தாலே அவர்களை பரிசுத்தப்படுத்தவும், எவரெல்லாம் தங்கள் சாட்சியால் அவரை விசுவாசிக்கிறார்களோ அவர்களெல்லாம் ஐக்கியமாக இருக்கும்படிக்கு அவர்களை ஆசீர்வதிக்கவுமே அவருடைய பெரும் ஆசாரிய பரிந்துப் பேசுதலாக இருந்தது (யோவான் 17:9-24).

அவர் எப்போதும் அவருடைய மக்களுக்காக “பரிந்துப் பேசவே வாழ்கிறார்” என்பதனை அறிந்து (எபி. 7:25) “அப்போஸ்தலர் களும் ஆதி திருச்சபையும் இயேசுவின் எடுத்துக்காட்டினையே தங்கள் ஜெபங்களில் பின்பற்றினார்கள்” (அப். 1:14; 2:42; 4:23-31; 12:5-12; 13:1-3). கிறிஸ்தவ மன்றாட்டுகளில் தூய ஆவியானவரின் பரிந்து பேசுதலையும் உதவியையும் பவுலும் குறிப்பிட்டிருக்கிறார் (ரோமர் 8:26-28). அவருடைய நிருபங்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் வாழ்ந்த ஆண்டவருடைய பிள்ளைக்காக தொடுதல் நிறைந்த மற்றும் வல்லமை நிறைந்த மன்றாட்டுகளால் நிறைந்திருந்தது. இந்த அப்போஸ்தலர் தனிப்பட்ட விதத்தில் அவர் அறிந்திராத சகோதரருக்காகவும் அடிக்கடி ஜெபித்தார் (எபே. 1:15-23; 3:2, 14-21). மேலும் “எந்தச் சமயத்திலும்” சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் “சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும்” விழித்துக் கொண்டிருங்கள் என வலியுறுத்துகிறார் (எபேசியர் 6:18-19). நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும் (1 தீமோ. 2:2) என பவுல் கிறிஸ்தவர்களை வலியுறுத்தி பரிந்து பேசும் ஜெபங்களை மேன்மை மிக்கதாகக் கண்டார்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]John H. Walton, Victor H. Matthews, and Mark W. Chavalas, *The IVP Bible Background Commentary: Old Testament* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2000), 50. [2]Edwin Yamauchi, “חָוָה,” in *TWOT*, 1:268. [3]இயேசு ஜீவ தண்ணீரை வாக்களிக்கையில் (யோவான் 4:10, 11) சமாரிய பெண்மணியும் அவரை “ஆண்டவர்” என்றே குறிப்பிட்டார் (κύριος, *kurios*, குரியொஸ்), இதன் பொருள் யாதெனில் “பெரும் மதிப்பிற்குரியவர்” (NASB; KJV;

NIV; NRSV) என்பதாகும். [4]பண்டைய எபிரெய அளவுகளுக்கு தற்கால இணையான அளவுகளை தீர்மானிப்பது கடினமாகும். ஆய்வுக்காக “சியா,” பார்க்க Roland de Vaux, *Ancient Israel*, vol. 1, *Social Institutions* (New York: McGraw-Hill Book Co., 1965), 201–3; மற்றும் Edward M. Cook, “Weights and Measures,” in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Greand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:1050–51. [5]John E. Hartley, *Genesis*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 2000), 178. [6]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 312. [7]Martin J. Mulder, “Sodom and Gomorrah,” in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 6:99–103. [8]காண்க *The Confession of Faith of the Presbyterian Church in the United States* (Richmond, Va.: John Knox Press, 1952), 25–30. வெஸ்ட்மினிஸ்டர் கன்ஃபெஷன் ஆஃப் ஃபெய்த்திலிருந்த வந்த இந்த போதனை, உலகமெங்கிலும் உள்ள பல “சீர்திருத்த திருச்சபைகளில்” தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. [9]“ஆண்டவர் ஒரு விசேஷித்த செயல்களுக்காக ஒரு சிலரை கவனமாக தெரிவு செய்கையில் அவர்கள் அந்த நோக்கத்திலிருந்து வழி விலகி செல்லும்போது அவர்களை புறக்கணிக்கவும் கூடும் (1 சாமு. 2:27)” என ஜான் என். ஓஸ்வால்ட் கூறியிருக்கிறார். (John N. Oswalt, “בָּחַר,” in *TWOT,* 1:100.) [10]Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 18–50*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 23.

[11]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 261–262.